அங்கே அரிப்பு ஏற்பட்டு தூர்ந்துவிடும் நிலையில் இருக்கிறது. எனவே அந்த மரத்தை வெட்டி எடுப்பதைவிட ஆழப்படுத்திவிட்டால், அந்த மரம் சுலபமாக வெளியே வந்து அங்கே குடிநீர் பற்றாக்குறையைத் தீர்க்கும். எனவே அரசு அதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.05

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிணறு உறைகிணறு என்பதனாலே அதை அகலப்படுத்த முடியாது. அதை ஆழப்படுத்த வேண்டும் என்று பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படும் நிலையில் அதிலே மிகப் பெரிய பாறாங்கல் ஒன்று இருக்கிற காரணத்தாலே அதை ஆழப்படுத்தவும் இயலவில்லை. அப்படி ஆழப்படுத்த முடியாத நிலையிலும்கூட, அந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க முயற்சிகள் எடுக்கப்பட்டு, நல்லமுறையிலே குடிதண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேல்நிலை தொட்டிகள் கட்டியிருக்கும் அந்த நிலையில் அந்த மேல்நிலை தொட்டியின் மத்தியில் ஒரு பார்ட்டிஷனைப் போட்டு ஆல்டர்நேட்டிவ்வாக தண்ணீர் விட்டால் சுகாதார ரீதியாக மக்களுக்கு தண்ணீர் வழங்க இயலும். அதை அரசு கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவரது கோரிக்கையை ஏற்று அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்).

(அ) இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக் கட்டளைகள் (திருத்த) சட்டமுன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(ஆ) ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப்பெட்டித் திரையில் திரைப் படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1991-ஆம் ஆண்டு தமிழ் நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக்காட்சிப்பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிப்பதிவுச் சிறுபேழைப் பதிவுக் கருவிகள் (வி.சி.ஆர்.) மூலமாகத் தொலைக் காட்சிப் பெட்டித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை" பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.